## சுருக்கம்

கைத்தறித் தொழில் – விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம், பொங்கல் 2013 – தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு வழங்கப்படும் கையாளும் கட்டணம் - ரூ.4.80 கோடி முன்பணமாக வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

**கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (டி2) துறை,**

அரசாணை (நிலை) எண்.61

நாள் 27.03.2013
நந்தன, பங்குனி 14,
திருவள்ளுவர் ஆண்டு 2044

படிக்கவும்:

1. அரசாணை (நிலை) எண்.137, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (டி2) துறை, நாள் 28.06.2012
2. அரசாணை (நிலை) எண்.176, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (டி2) துறை, நாள் 13.08.2012
3. அரசாணை (நிலை) எண்.246, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (டி2) துறை, நாள் 23.11.2012
4. கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் கடிதம் எண்.4324/2012/ப்பி1, நாள் 03.12.2012.
5. மேலாண்மை இயக்குநர் கோ–ஆப்டெக்ஸ் அவர்களின் கடிதம் எண்.H1/000504/FDS/2013/2012–2013, நாள் 18.02.2013.

---

**ஆணை:–**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கிராமப்புற மற்றும் நகர்ப்புற ஏழை எளிய மக்களுக்கு விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தினை 2013–ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்குத் தொடர்ந்து செயல்படுத்தவும், இத்திட்டத்திற்குத் தேவையான சேலைகள் மற்றும் வேட்டிகளின் உற்பத்தியினை தொடங்குவதற்கும் அனுமதி வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டன.

2) மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2013–ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கான, விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் 170,00,000 சேலைகள் மற்றும் 170,00,000 வேட்டிகள் உற்பத்தி செய்யவும்,

/த.பி.பா./

இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.256.00 கோடி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டது. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், பொங்கல் 2013–ஆம் ஆண்டு விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்தினை செயல்படுத்தத் தேவைப்படும் ரூ.350.00 கோடியில், ஏற்கனவே ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூ.256.00 கோடி போக, தேவைப்படும் கூடுதல் தொகையான ரூ.94.00 கோடியை நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டது.

3) மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம், பொங்கல் 2013–ஐ செயல்படுத்துவதற்காக கிடங்கு வாடகை, இருப்பு ஆய்வு, ஏற்று இறக்கு கூலி, மின்கட்டணம், தொலைபேசி கட்டணம் மற்றும் போக்குவரத்து போன்ற செலவுகளை மேற்கொண்டமைக்கான கையாளும் கட்டணமாக ரூ.12.80 கோடியினை முன்பணமாக தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு வழங்குமாறு அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

4) மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் மேலாண்மை இயக்குநர், கோ–ஆப்டெக்ஸ், விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம், பொங்கல் 2013–ஐ செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு மாநில பிரதம கூட்டுறவு வங்கியில் 11% வட்டியுடன் ரூ.12.00 கோடி கடனாக பெற்றுள்ளதால், விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம், பொங்கல் 2013–ஐ செயல்படுத்தியமைக்கான கையாளும் கட்டணத்தில் தற்போது முன்பணமாக ரூ.10.00 கோடியை வழங்குமாறு அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

5) கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் மற்றும் மேலாண்மை இயக்குநர், கோ–ஆப்டெக்ஸ் ஆகியோரின் பரிந்துரையினை அரசு கவனமாக பரிசீலித்து, விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம், பொங்கல் 2013–ஐ செயல்படுத்தியமைக்கான கையாளும் கட்டணத்தில் முன்பணமாக ரூ.4.80 கோடியை (நான்கு கோடியே எண்பது இலட்சம் மட்டும்) தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு வழங்கி ஆணையிடுகிறது.

6) மேலே பத்தி ஐந்தில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> 2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள் – 200 ஏனைய திட்டப்பணிகள் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II மாநிலத் திட்டம் – JK வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள மக்களுக்கு இலவசமாக கைத்தறித் துணி வழங்குதல் – 09 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை
>
> (தகவல் தொகுப்பு குறியீடு 2235 60 200 JK 0937)

.... 3.

7) மேலே பத்தி ஐந்தில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை, தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்காக, மேலாண்மை இயக்குநர், கோ–ஆப்டெக்ஸ் என்னும் பதவிப்பெயரில் உள்ள கணக்கில் பெற்று வழங்குவதற்கு கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

8) விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம், பொங்கல் 2013 தொடர்பாக தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் மேற்கொண்ட உள்ளபடியான செலவின விவரங்களை உடனடியாக தெரிவிக்க வேண்டும் என்றும், செலவழிக்கப்படாத தொகை ஏதேனும் நிலுவையில் உள்ளதா என்பதனை கண்டறியும் பொருட்டு ஒத்திசைவு மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் மேலாண்மை இயக்குநர், கோ-ஆப்டெக்ஸ் அறிவுறுத்தப்படுகிறார்.

9) இவ்வரசாணை, நிதித் (தொழில்கள்) துறையின் அ.சா.எண்.90/ செயலாளர் (செலவினம்)/2013, நாள் 26.03.2013–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கோ. சந்தானம்
அரசு செயலாளர்

பெறுநர்:
கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், சென்னை – 600 108.
தனி அலுவலர் / மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்., சென்னை – 600 008.
கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை – 600 005.
மாநில தலைமை கணக்காயர் (A&E), சென்னை– 600 018/( பெயரில்).
மாநில தலைமை கணக்காயர் (CA), சென்னை– 600 018 /( பெயரில்).
மாநில கணக்காயர் (CAS), சென்னை– 600 009.

**<u>நகல்:-</u>**
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதன்மைச் செயலாளர், சென்னை – 600 009.
மாண்புமிகு அமைச்சர் (கைத்தறி மற்றும் துணிநூல்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 600 009.
வருவாய்த் துறை / நிதித்துறை, சென்னை– 600 009.
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை– 600 009.
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (எ1/பி1) துறை, சென்னை– 600 009.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

அரசு சார்புச் செயலாளர்